**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

**தவணைப் பரீட்சை, நவம்பர் - 2016**

**Term Examination. November - 2016**

FWC

| தரம் :- 13 (2017) | புள்ளித்திட்டம் | இந்திய வரலாறு |
|---|---|---|

பகுதி I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 3 | 11) | 5 | 21) | 5 | 31) | 1 |
| 02) | 4 | 12) | 1 | 22) | 3 | 32) | 4 |
| 03) | 1 | 13) | 3 | 23) | 1 | 33) | 5 |
| 04) | 5 | 14) | 4 | 24) | 2 | 34) | 3 |
| 05) | 2 | 15) | 2 | 25) | 4 | 35) | 2 |
| 06) | 1 | 16) | 5 | 26) | 5 | 36) | 5 |
| 07) | 3 | 17) | 1 | 27) | 1 | 37) | 1 |
| 08) | 4 | 18) | 3 | 28) | 3 | 38) | 4 |
| 09) | 5 | 19) | 4 | 29) | 2 | 39) | 3 |
| 10) | 2 | 20) | 2 | 30) | 4 | 40) | 2 |

பகுதி II

(1) படவேலை

(2) வடமேற்குக் கணவாய்கள் அறிமுகம் செய்தல்
கணவாய்கள் இந்திய வரலாற்றினை நிர்ணயிப்பதில் செல்வாக்கு செலுத்திய விதம்
பல்வேறு இனத்தவர்களின் இந்திய வருகை
ஆரியர், கிரேக்கர், பாரசீகர், குஷாணர்,ஹீணர், அராபியர்
பல்வேறு இனத்தவர்களின் வருகையாலும் படையெடுப்புகளாலும் ஏற்பட்ட மாற்றங்கள்
இந்திய அரசுகள் பலவீனமடைதல், வீழ்ச்சியுறுதல் புதிய அரசுகள் உதயமாதல்.
வடமேற்கு கணவாய்களை பாதுகாப்பதன் அவசியம் ஏற்படல்.
இந்தியாவிற்கு ஏற்பட்ட பண்பாட்டுத் தாக்கம்
ஆக்கிரமிப்பாளர்கள் தமது பண்பாட்டை இந்தியரில் அறிமுகம் செய்தல்.
உ +ம் காந்தாரக் கலை

(3) I. மோட்டிமர் வீவர்
ஜோன் மார்ஷல்
R.D பனர்ஜி
ராம்பகதூர் தயாராம்
மு.டீ டிப்ஷிஸ்
து.ர் மெக்கே

II. சிந்து
ராவி

III. பசுபதி, ஆண்தெய்வம், லிங்க வழிபாடு
தாய்த் தெய்வ வழிபாடு
மிருகவழிபாடு
மரவழிபாடு, நீரை வழிபடல்
அக்கினி, சூரியவழிபாடு

IV. ஹரப்பா, மொஹஞ்சதாரோ, சங்குதாரோ, லோத்தல், கலிபன்கள் ஆகிய இடங்களில் நாகரிகம் நிலவியதற்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
முறையான நகரஅமைப்பு, திட்டவட்டமான வீதி
சுட்ட செங்கல் கட்டடம், கழிவு நீரை அகற்றுவதற்கான முறைகள் சாளரங்களோடு கூடிய பல கூடங்களும் அறைகளும் முற்றங்களும் கிணறுகளும் காணப்படல்.
கட்டிட நிரமாண அமைப்பு, சமயக் கட்டடங்கள் ஏனைய கட்டடங்கள் அமைக்கப்படல், பாரிய கட்டடங்கள்
பாரிய வீடுகள் அமைக்கப்பட்டன
குளியல் அறை, தடாகம், தானியக் களஞ்சியம்.

04) குடும்பம் மிக முக்கிய அலகு
குடும்பத்தின் தலைவன் மூத்த ஆண்மகன். மற்றவர்கள் அவருக்கு கட்டுப்படல்.
சுமூகமாகவும், நட்புறவுடனும் வாழ்தல்.
உறவினர் நல்லமுறையில் நடத்தப்படல்.
ஆரம்பத்தில் சாதிமுறை இல்லை. பிற்கால வேதகாலத்தில் சாதிமுறை தோற்றம் பெற்றது.
பெண்களுக்கு உயர் அந்தஸ்து அளிக்கப்படல்.
வீட்டின் தலைவி சமயச் சடங்குகளில் பங்குவகித்தல்.
கணவனுடன் மனைவி இல்லாத சமயச் சடங்குகள் முழுமையானதாக கருதப்படாமை.
கணவனை தெரிவு செய்வதில் சுதந்திரம் இருந்தமை.
பெண்கள் உயர்கல்வி கற்றல்.
பிற்காலத்தில் சரிவு ஏற்படல்.
ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலை.
பலவித திருமணம் அரச குடும்பத்தவரிடம் காணப்பட்டது.
திருமணம் புனிதமாக கருதப்பட்டது. விதவைகள் மறுமணம், குழந்தை மணம் இல்லை.
பெண்களுக்கு ஆண்கள் சீதனம் வழங்கல்.
கோதுமை, பார்லி, பால், தயிர், வெண்ணெய், நெய், தேன், பழங்கள், காய்கறிகள், இறைச்சி என்பன உணவாகும்.
சோமபானம், சுரபானம் அருந்துதல்.
வேட்டி, சட்டை ஆதிவாசி (மேல்ஆடை)
தலைப்பாகை அணிதல்.
பருத்தி, உரோமம் இவற்றால் ஆடை
குதிரைப்பந்தயம், தேர்ப்பந்தயம், வேட்டையாடுதல், தாயம் விளையாடுதல், இசை, நடனம் பொழுதுபோக்காகும்.

**அரசியல்**

அரசர் ஜன என்று அழைக்கப்பட்டார்.
பல இனங்களாக வாழல். ஓவ்வொரு இனத்திற்கும் தலைவன் ராஜன் இருந்தான்.
பரம்பரை உரிமை காணப்படல்.
அரசனின் ஆணைக்கு கட்டுப்படல்.
சில இனங்களில் அரசரை தேர்ந்தெடுத்தல்.
தன்நிலம், குடிமக்களைக் காத்தல்.
மக்கள் நன்கொடை கொடுத்தமை.
அரசருக்குத் துணை புரிய புரோகிதர், சேனாதிபதி இருந்தமை.
சமய அறிவுரை புரோகிதர் வழங்குதல்.
படைத்தலைவன் சேனாதிபதி.
சபா, சமிதி மக்கள் மன்றங்கள்.
சபா மூத்தோர் அவை சபை – மக்களின் தேசிய அவை
ஜனநாயக முறையில் அமைந்தமை.
வில் அம்பு,ஈட்டி, எறிவேல், வாள், கோடாரி, தலைக்கவசம் பயன்படுத்தப்பட்டன.

05) புவியியற் காரணிகள் மண்வளம், நீர்வளம்

உறுதியான பொருளாதாரம்

பயனுறுதியான நிர்வாகம் பிம்பிசாரன் நடவடிக்கை – அயல் அரசுகளுடனான உறவு

அஜாதசத்ரு மன்னனின் செயல்கள் கோசல, வைசாலி போராட்டங்கள் கசீதேசம் கைப்பற்றப்படல்.

சிசுநாக வம்சம், நந்த வம்சம் என்பவற்றின் ஆட்சிகள்.

06) அசோகனின் தர்மநெறி பொதுவாக அனைத்து மக்களின் சாராம்சத்தை ஒன்று சேர்த்த தர்மநெறியாகும். கல்வெட்டுக்கள் மூலம் அறியலாம்.

சமயத்தை விட ஒழுக்க நெறியே முதலிடம் பெறுதல்.

ஐந்து பிரிவினுள் உள்ளடக்கலாம்.

**பணிவு :**

I தாய், தந்தைக்குப் பணிதல்.
மூத்தோர், ஆசிரியர், உயர்குலத்தோருக்குப் பணிந்து நடத்தல்.

II மரியாதை – மாணவர் ஆசிரியருக்கு மரியாதை. ஆசிரியர்,ஆசிரியர்களுக்கு, அறிஞர்களுக்கு மரியாதை

III சுதந்திரம் - பிராமணர், நண்பர், சகபாடி, உறவினர், வயோதிபர்களுக்கு தானம் வழங்கல்.

IV உபசரணை – பிராமணர், உறவினர், பணியாளர், பிறரில் தங்கி வாழ்வோர், ஏழைகள், உதவியற்றோர், நண்பர், சகபாடி

V உயிருள்ள மிருகங்களை கொலை செய்வதைத் தவிர்த்தல். பறவைகள், விலங்குகள், ஊர்வன போன்ற எந்த உயிரையும் கொலை செய்யாதிருத்தல், துன்புறுத்தாதிருத்தல். வேறு ஒழுக்கநெறிகள், இரக்கம், அன்பு, உண்மை பேசுதல், புலனடக்கம், நன்றி, மனத்துாய்மை, சமயப்பொறை பாவத்தை நினைத்து அஞ்சுதல், முரட்டுத்தனம், கொடுமை, சினம், பொறாமை இல்லாதிருத்தல்.

07) I ஸ்ரீ குப்தன், கடோற்கஜன்

II விக்கிரமாதித்தன், சிம்மவிக்கிரமா, தேவராஜன், தேவகுப்தன், தேவஸ்ரீ, பரமபாகவதன்

III காளிதாசர், விசாகதத்தர், அமரசிம்மர், சூரியப்பர், வராகமிஹரர், பாலகுப்தர், அசங்கர், திக்நாதர்

IV கி.பி 330 – 370 வரை திக்விஜயக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லல். அகலபாத் கல்வெட்டு மூலம் அறிதல்.

**பேரரசின் விரிவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த யுத்த செயற்பாடுகள்.**

I ஆரிய வர்த்தனம் (கங்கை சமவெளி வெற்றி)

II மலைப்பிரதேச கோத்திரத் தலைவர்களுக்கு எதிராக செயற்பட்ட முறை.

III தென்னாட்டு ஆட்சியாளர் பன்னிருவருக்கு எதிராகச் செயற்பட்டமை

**வெற்றி பெற்ற விதமும் ஆட்சி செலுத்திய முறையும்**

வட இந்தியாவில் ஒன்பது மன்னர்களைத் தோற்கடித்து அப்பிரதேசங்களை தனது ஆட்சியின் கீழ் கொண்டு வருதல்.

நேரடியாகத் தன் அரசுடன் இணைத்துக் கொள்ளப்படா விடினும் வருடாந்தம் வரிவசூலித்தலும் தன் ஆணையை செயற்படுத்தும்படி இடமளிக்கப்பட்ட அரசுகள்.

கோத்திர அல்லது கண இராச்சியங்கள்

இணைத்துக் கொண்ட தென்னிந்திய அரசுகளை அவர்களிடமே ஒப்படைத்து தனக்கு கீழ்ப்பட்டவர்களாக அவர்கள் செயற்பட இடமளித்தது.
மேலாணையை ஏற்று பரிசில்கள், காணிக்கைகள் வழங்கிய அரசுகள் பல இருந்தமை.
தனது மகளைத் திருமணம் செய்து கொடுத்து உறவை ஏற்படுத்திக் கொள்ளல். இலங்கை மன்னன் ஸ்ரீமேகவர்மனுடன் தொடர்பு வைத்திருத்தல்.
எல்லைப்புற அரசுகளை அடக்குதல்.
பதவி ஏற்கும் போது சிற்றரசாக விளங்கிய அரசைப் பேரரசாக மாற்றியமை.
போர் வெற்றிகளும் பேரரசு விஸ்தரிப்பும் நிறைவெய்திய பின் தனது வலிமையை உலகுக்கு அறிவிக்க அஸ்வமேத யாகம் செய்தல்.

08) I சுங்க வம்சம்
கி.மு 2ம் நூற்றாண்டில் இந்தியாவை ஆட்சி செய்த அரச வம்சம்
சுங்கர்களின் வரலாற்றை அறிய காளிதாசரின் மாளவிகாத்திமித்ரம் என்ற நூல் மிகவும் பயனுள்ளதாக உள்ளமை.
திவ்வியாவிதானம் பாணரின் ஷர்சசரிதம் பதஞ்சலியின் மகாபாஷ்யம் மற்றும் கல்வெட்டுக்களும் அவர்களது வரலாற்றை அறிய உதவுகின்றமை.
இவர்களது வம்சம் பற்றி பல்வேறு கருத்துகள் நிலவுகின்றமை.
புஷ்யமித்திர சுங்கர் முதலாவது ஆட்சியாளராக விளங்கியமை.
மௌரிய மன்னரான பிரகத்ரதாவைக் கொலை செய்து விட்டுப் புஷ்யமித்திரர் பாடலிபுரத்தை தலைநகராகக் கொண்டதாகக் கூறப்படல்.
விதர்ப்ப நாட்டைத் தம்மடிப்படுத்தியவர்களைத் தோற்கடித்து தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டமை.
மகதம் தொடக்கம் நர்மதா நதிவரை தனது அதிகாரத்தை விரிவடையச் செய்தமை. வடமேற்கில் உள்ள ஜலந்தார், சியல்கோட் கைப்பற்றியமை.

II இந்திகா
மெகஸ்தனிஸின் நூல் இந்திய வரலாற்றுச் செய்திகளைக் கூறும் வெளிநாட்டு ஆதாரங்களும் சிறப்பிடம் பெறுதல்.
கூறும் செய்திகளின் உண்மைத்தன்மை ஏனைய ஆதாரங்களுடன் ஒப்பிடல்.
அசோகக் கல்வெட்டுக்கள், மகாவம்சம் என்பவற்றுடன் ஒற்றுமைப்படல்.

III இரண்டாம் புலிகேசி
மங்களேசனை வெற்றி கொண்டு மேலைச்சாளுக்கிய அரசைப் பெறல்.
சாளுக்கிய வம்சத்தின் சிறந்த அரசன்.
கி.பி 609 – 642 வரை ஆட்சி புரிதல்.
கடம்பரை வெற்றி கொள்ளல்.
எதிராக இருந்த சிற்றரசுகளை வெற்றி கொள்ளல்.
வடகொங்கணம், தெற்கு குஜராத், லதா வம்சம், மாளவர் கூர்ச்சர்கள் என்போரை வெல்லுதல்.
ஹர்சனின் படைஎடுப்பை முறியடித்தல்.
பல்லவர்களுடனான போரில் வேங்கியைக் கைப்பற்றல்.
காஞ்சிப் படைஎடுப்பு பற்றி ஐகோல் கல்வெட்டு விபரித்தல்.
பாரசீக அரசன் உம்குஸ்கு மரியாதை செய்தல்.
யுவாங் சுவாங் இவனது ஆட்சி பற்றி கூறுதல்.
1ம் நரசிம்மவர்மனால் கொலை செய்யப்படல்.

IV அலகபாத் பிரசஸ்தி
சமுத்திர குப்தனைப் பற்றி அறிய உதவும் சிறப்பு வாய்ந்த சாசனம்.
ஹரிசேனரால் உருவாக்கப்பட்டது.
அலகபாத் கோட்டையிலுள்ள அசோகத்தூண் மீது செதுக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் பகுதியில் சமுத்திர குப்தனை மன்னனாக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடப்பட்டுள்ளது.
இரண்டாவதாக அரசினை விரிவுபடுத்தும் பொருட்டு மேற்கொண்ட படையெடுப்புகள், கைப்பற்றிய பிரதேசங்கள், அவற்றின் ஆட்சியாளர்கள் போன்ற விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.
ஏனைய அரசர்கள் திறை செலுத்தியமை, அரசனுக்கு மரியாதை செலுத்தியமை போன்ற வர்ணனைகள் காணப்படல்.
இந்தியாவுக்குவெளியே ஆட்சி செய்த அரசர்கள், தூதுவர்கள், பரிசுப்பொருட்கள் அரசவைக்கு அனுப்பிய விபரம் கூறப்பட்டுள்ளது.

09) A) மகாஜன மூலாதாரங்களின்படி நான்காம் பௌத்த மகாநாடு காஷ்மீரில் குண்டலவினி என்ற மடத்தில் கட்டப்பட்டது. கனிஸ்கன் இதற்கு அனுசரணை வழங்கினான்.
புத்தசமயம் 18 பிரிவாகப் பிரிந்திருந்ததுடன் பல்வேறு கருத்துக்கள் விமர்சிக்கப்பட்டமை.
பௌத்த மறை நூல்களான திரிபிடங்களின் விரிவுரையான மகாவிபாஷம் செப்பேடுகளில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் பாதுகாக்கப்பட்டன.
போதி சத்துவக் கொள்கை புகுத்தப்படல்.
சிலை வழிபாடும், சடங்குகளும் அபிவிருத்தி அடைதல்.
மக்களிடையே மகாஜனம் வலுவடைதல்.
இந்தியாவின் தென்பகுதி தென்னிந்தியா வழியாக இலங்கையில் பரவுதல்.
இந்தியாவுக்கு வெளியே மத்திய ஆசியா, சீனா, தென்கிழக்காசியா போன்ற நாடுகளில் பரவல்.
சமஸ்கிருத மொழி வளர்ச்சி.
சீன மொழியில் மொழிபெயர்க்கப்படல்.
அறிஞர் தோற்றம் நாகர், நாகர் சுனர், அஸ்வகோஷர்.

B) சமூக நிலை
சமூகம் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தமை.
சாதிப்பிரிவுகள் சமூக அமைப்பின் முதுகெலும்பாக விளங்குதல்.
தொழில் அடிப்படையில் சாதிகள் பிரிக்கப்படல்.
சாதிக்கலப்பு தவிர்க்கப்பட்டது.
பிராமணர்கள் சமூகத்தில் மதிப்புடன் இருந்தமை.
ஹவிகா, முர்தகா, கோகுவிதா போன்ற புதிய சாதிகள் முலைத்தமை.
சமூகத்தில் நடைபெற்ற எல்லா செயல்களிலும் பெண்கள் பங்கு கொள்ளல்.
பல பெண்களை மணம் புரியும் வழக்கம் இருந்தது.

**அரசியல் நிலை**
நாட்டின் தலைவர் மன்னர். இவர் வரம் பற்ற அதிகாரங்களைப் பெற்றிருத்தல்.
அரசுரிமை பரம்பரையானது. அரசர்கள் பல பட்டங்களை சூடிக் கொள்ளல்.
அசுவமேதம், ராஜசூயம் போன்ற யாகங்களைச் செய்தல்.
சிறப்பான நிர்வாகம், நிர்வாக வசதிக்காக நாடு ஜயைதங்கள், ஆஹாங்கனி எனப் பிரிக்கப்பட்டது.
இராஜமாத்தயா, மகாமந்திரி, மகா சேனாதிபதி போன்ற அதிகாரிகள் பணிபுரிந்தனர்.
வரி விதிக்கப்பட்டது. வரிச்சுமை இல்லை.
வலிமையான படை
நாட்டின் வருமானம் மக்கள் நலனுக்கே செலவிடப்பட்டது.